**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**
முன்னிலை : திரு.N.பாரதிராஜன், பி.ஏ., பி.எல்.,
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி**

2025 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 24 ஆம் நாள் திங்கட்கிழமை
**இ.ம.எண்.01/2024 இன் அ.வ.எண்.117/2024**

1. கோயமுத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், தென் சித்தூர் அஞ்சல், நல்ல தண்ணீர் தோட்டம், மெயின் ரோடு, கதவு எண் 3/144–ஏ–ல் வசிக்கும் சுமார் 71 வயதுடைய லேட். முத்துச்சாமியின் மனைவி திருமதி.ரங்கநாயகி.

2. கோயமுத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், தென் சித்தூர் அஞ்சல், நல்ல தண்ணீர் தோட்டம், மெயின் ரோடு, கதவு எண் 3/144–ஏ–ல் வசிக்கும் சுமார் 47 வயதுடைய லேட். முத்துச்சாமியின் மகன் திரு.சிவக்குமார்.

3. கோயமுத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், சமத்தூர் அஞ்சல், மடத்து ரோடு, கதவு எண் 37–ல் வசிக்கும் சுமார் 45 வயதுடைய லேட். முத்துச்சாமியின் மகள் திருமதி.நாகேஸ்வரி.

4. கோயமுத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், சமத்தூர் அஞ்சல், குடிகிணர் வீதி, கதவு எண் 4/11–ல் வசிக்கும் சுமார் 42 வயதுடைய லேட். முத்துச்சாமியின் மகள் திருமதி.சாந்தி.

.... மனுதாரர்கள்/வாதிகள்

/ எதிர் /

கோயமுத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், சுப்பேகவுண்டன்புதூர் அஞ்சல், சுங்கம், ராஜீவ்காந்தி நகர், கதவு எண் 1/133–ல் வசிக்கும் சுமார் 74 வயதுடைய லேட். தங்கவேல் (எ) ராமலிங்கத்தின் மனைவி திருமதி.சரஸ்வதி.

.... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

## ஆணையுரை

மனு சொத்துக்களில் மனுதாரர்கள் கொண்டுள்ள சுவாதீனத்திற்கு எதிர்மனுதாரரோ, அவரது ஆட்கள் வகையறாக்களோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என இவ்வழக்கு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக் கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39, விதி 1 மற்றும் 2–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் நாள் : 03.06.2024.

இம்மனுவானது கடந்த 12.03.2025 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.T.மனோகர் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திருமதி.R.வளர்மதி அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வழக்கறிஞர்களின் வாதுரைகளை கேட்டும், இதுநாள் வரை எனது கவனமான பரிசீலனையில் இருந்து வரும் வழக்காவணங்களை பரிசீலித்தும், இந்நீதிமன்றம் இன்று வழங்கிடும் கீழ்க்கண்ட...

## இறுதி உத்தரவு

1. **முடிவாக,** மனு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

## சொத்துவிபரம்

**1. As per Doc. No. 140/BK3/2000 S.R.O. Anaimalai – 'A' Schedule:–**

**பிரிவு: 1**

திருப்பூர் பதிவு மாவட்டம், தற்போது கோயமுத்தூர் பதிவு மாவட்டம், ஆனைமலை உபபதிவு மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், தற்போது ஆனைமலை வட்டம், தென் சித்தூர் கிராமம் புலத்தில் 38 நெ. பட்டா க.ச. 25 நெ. காலை பு.ஏ. 9.63 க்கு தீ.ரூ.10.79 இதில் மேல்புறம் வடகோட்டில்,

| | | |
|---|---|---|
| கு.மயில்சாமிக்கவுண்டர், ரங்கசாமிக்கவுண்டர் இவர்கள் பூமிக்கும் | ... | மேற்கு |
| ம.முருகாத்தாள் பாக பூமிக்கும் | ... | வடக்கு |
| சு.ஆறுமுகக்கவுண்டர் பூமிக்கும் | ... | கிழக்கு |
| கிழமேல் ரோட்டிற்கும் | ... | தெற்கு |

இதன் மத்தியில் தென்வடல் நீளியாக பு.ஏ. 6.57 1/2 க்கு தீ.ரூ.7.37 உள்ள பூமியும், மேற்படி பூமியில் உள்ள துருஸ்து கிணர், 1ம், மேற்படி கிணற்றில் பொருத்தப்பட்டுள்ள 5 எச்.பி.சுகுனா மின்சார மோட்டார் பம்ப்செட்டும் 5 எச்.பி.கம்ப்ரசர், மாட்டுச்சாளையும், மேற்படி காலையில் உள்ள 200 பலனுக்கு வராத இளந்தென்னை மரங்களும் மற்றும் இந்த பூமிக்கு மாமூலாக பாயப்பட்டுள்ள பி.ஏ.பி. வாய்க்கால் மடை அரணி, தண்ணீர் பாத்தியம் வகையறா சொத்துக்களில்,

| | | |
|---|---|---|
| கிழமேல் ரோட்டிற்கும் | ... | தெற்கு |
| 'ஏ' ஜாபிதா 2 வது பிரிவு பூமிக்கும் | ... | மேற்கு |
| முருகாத்தாள் பூமிக்கும் | ... | வடக்கு |
| சு.ஆறுமுகக்கவுண்டர் பூமிக்கும் | ... | கிழக்கு |

இவைகளின் மத்தியில் தென்வடல் நீளியாக பு.ஏ.1.60 செண்ட் பூமியும், இதற்கு 'சி' ஜாபிதா பாகத்திலுள்ள கிணற்றிலிருந்து பைப்லைன் மூலியமாக மாமூலாக தண்ணீர் பாய்த்துக்கொள்ளும் பாத்தியங்களும் மற்றும் இதற்கு உண்டான பி.ஏ.பி. வாய்க்கால் பாசன பாத்தியங்களும் மாமூல் வழிநடை பாத்தியங்களும் சகிதம்.

| | | |
|---|---|---|
| பின்னும் மேற்படி பூமியில் என்னுடைய பூமிக்கும் | ... | தெற்கு |
| முத்துச்சாமி வீட்டுக்கும் | ... | மேற்கு |
| என்னுடைய இதர பூமிக்கும் | ... | வடக்கு, கிழக்கு |

இவைகளில் மத்தியில் தென்வடலடி – 30, கிழமேல் அடி – 10 இந்த விஸ்தீரணத்தில் கட்டப்பட்ட வடக்குப் பார்த்த மிஷனோடு போட்ட வில்லை

வீடும், மேற்படி வீட்டிலுள்ள எலக்ட்ரிக் லைட்டுகளும், மேற்படி வீட்டுக்குண்டான மாமூல் வழிநடை பாத்தியம் வகையறா சகிதம். கதவு எண். 3/113 எப் இதில் ஒரு பகுதி, எஸ்.சி.நெ. 448.

மேற்படி தாவா சொத்து தற்பொழுது க.ச. 25/1 ஆக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது.

**1. As per Doc. No. 140/BK3/2000 S.R.O. Anaimalai – 'A' Schedule:–**

**பிரிவு: 2**

திருப்பூர் பதிவு மாவட்டம், தற்போது கோயமுத்தூர் பதிவு மாவட்டம், ஆனைமலை உபபதிவு மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், தற்போது ஆனைமலை வட்டம், தென் சித்தூர் கிராமம் புலத்தில் 38 நெ. பட்டா க.ச. 25 நெ. காலை பு.ஏ. 9.63 க்கு தீ.ரூ.10.79 இதில் மேல்புறம் வடகோட்டில்,

| | | |
|---|---|---|
| கு.மயில்சாமிக்கவுண்டர், ரங்கசாமிக்கவுண்டர் இவர்கள் பூமிக்கும் | ... | மேற்கு |
| ம.முருகாத்தாள் பாக பூமிக்கும் | ... | வடக்கு |
| சு.ஆறுமுகக்கவுண்டர் பூமிக்கும் | ... | கிழக்கு |
| கிழமேல் ரோட்டிற்கும் | ... | தெற்கு |

இதன் மத்தியில் தென்வடல் நீளியாக பு.ஏ. 6.57 1/2 க்கு தீ.ரூ.7.37 உள்ள பூமியும், மேற்படி பூமியில் உள்ள துருஸ்து கிணர், 1ம், மேற்படி கிணற்றில் பொருத்தப்பட்டுள்ள 5 எச்.பி.சுகுனா மின்சார மோட்டார் பம்ப்செட்டும் 5 எச்.பி.கம்ப்ரசர், மாட்டுச்சாளையும், மேற்படி காலையில் உள்ள 200 பலனுக்கு வராத இளந்தென்னை மரங்களும் மற்றும் இந்த பூமிக்கு மாமூலாக பாயப்பட்டுள்ள பி.ஏ.பி. வாய்க்கால் மடை அரணி, தண்ணீர் பாத்தியம் வகையறா சொத்துக்களில்,

| | | |
|---|---|---|
| கிழமேல் ரோட்டிற்கும் | ... | தெற்கு |
| 'சி' பாக ஜோதி பூமிக்கும் | ... | மேற்கு |
| முருகாத்தாள் பூமிக்கும் | ... | வடக்கு |

'ஏ' ஜாபிதா பாக பூமிக்கும் (1 வது பிரிவு) ... கிழக்கு

இவைகளின் மத்தியில் தென்வடல் நீளியாக பு.ஏ.1.60 சென்ட் பூமியும், இதற்கு 'சி' ஜாபிதா பாகத்திலுள்ள கிணற்றிலிருந்து பைப்லைன் மூலியமாக மாமூலாக தண்ணீர் பாய்த்துக்கொள்ளும் பாத்தியங்களும் மற்றும் இதற்கு உண்டான பி.ஏ.பி. வாய்க்கால் பாசன பாத்தியங்களும் மாமூல் வழிநடை பாத்தியங்களும் சகிதம். பின்னும்

என்னுடைய பூமிக்கும் ... தெற்கு

ஜோதி வீட்டுக்கும் ... மேற்கு

என்னுடைய பூமிக்கும் ... வடக்கு

ராமலிங்கம் வீட்டுக்கும் ... கிழக்கு

இவைகளில் மத்தியில் தென்வடலடி – 30, கிழமேல் அடி – 10 இந்த விஸ்தீரணத்தில் கட்டப்பட்ட வடக்குப் பார்த்த மிஷனோடு போட்ட வில்லை வீடும், மேற்படி வீட்டிலுள்ள எலக்ட்ரிக் லைட்டுகளும், மேற்படி வீட்டுக்குண்டான மாமூல் வழிநடை பாத்தியம் வகையறா சகிதம். கதவு எண். 3/113 எப் இதில் ஒரு பகுதி, எஸ்.சி.நெ. 448.

மேற்படி தாவா சொத்து தற்பொழுது க.ச. 25/1 ஆக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வுத்தரவு, 2025 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 24 ஆம் நாள் என் கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

**ஒப்பம்/– (N. பாரதிராஜன்)**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
பொள்ளாச்சி

-----------------------------------

**<u>இறுதி உத்தரவு</u>**

இ.ம. எண் 01/2024 இன் ஓ.எஸ்.117/2024

நாள் : 24.03.2025

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

பொள்ளாச்சி.

-----------------------------------